2009 பிப்ரவரி 23]

25 கிலோ மீட்டர் பயணம் செய்து அந்தப் பதிவுப் பணிக்காகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். மேலும், தோகைமலைப் பகுதி, கல் குவாரிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே அடிக்கடி நிறைய பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த 4 இடங்களிலுமுள்ள பதிவுகளை ஆய்வு செய்து, தோகைமலையிலேயே ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை, துறையினுடைய செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு, வருகிற மானியக் கோரிக்கையின்போது அவருடைய கோரிக்கை நிறைவேறக்கூடிய அளவிற்குத் துறை முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

46—

விடுதி

***61379—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமகிரிப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2009 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமகிரிப்பேட்டையில் 2008–2009 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி தொடங்க ஆணையிடப்பட்டு, 4–9–2008 முதல் இவ்விடுதி செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு எனது தொகுதிக்கு மாணவியர் விடுதி வேண்டுமென்று கேட்டவுடனே, அனுமதி வழங்கிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்த விடுதியானது வகுப்பறைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதிலே சுமார் 50 மாணவிகள் தங்கிப் படித்து வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய வகுப்பறைகளும் தேவைப்படுவதால், அந்த இடத்திலே, 0.25 ஏக்கர் நிலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக, அரசுக்கு அந்தப் பள்ளியிலிருந்து முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அந்த முன்மொழிவின் அடிப்படையில் இந்த ஆண்டே அந்தப் பள்ளி விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். தற்போது புதிய விடுதியைக் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுகிறோம். அதிலே குறைந்தபட்சம் 100 மாணவிகளாவது தங்கக்கூடிய இட வசதி உள்ளதாக இருக்க வேண்டும். ஆனால் தற்போது 50 மாணவிகள்தான் பல்வேறு விடுதிகளில் தங்கிப் படிக்கின்றார்கள். ஆகவே, கூடுதலாக மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக, அந்த வசதியும் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவியர் விடுதிகள்

2009 பிப்ரவரி 23]

கட்டுவதற்கு இடம் கிடைப்பதுதான் சிரமமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடத்திற்குத் தகுந்த ஏற்பாடு செய்து கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலேயே அந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மாணவர் சேர்க்கைக்கு ஏற்ப, அதிகப்படியான மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வேண்டிய அளவிற்கு அந்தக் கட்டடங்களும் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கடந்த ஆண்டு மாணவர் விடுதி வழங்கிய அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அங்கே இட வசதி அதிகமாக உள்ளது. வாடகைக் கட்டடத்தில் போதுமான வசதி இல்லாத காரணத்தினால், புதிய விடுதிக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதை அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல, இடம் இருக்கும் என்று சொன்னால் வருகிற நிதியாண்டிலேயே எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.